**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி**

**அசல் வழக்கு எண்: 40/2024** வா.சா.1

2025ம் ஆண்டு மார்ச் திங்கள் 18ம் நாள் செவ்வாய்க்கிழமை வாக்குமூலம் 1857ம் ஆண்டு சட்டப்பிரிவு 10(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்து வைக்கப்பட்டது.

**பெயர் : ராமன்** **தந்தை/கணவர் பெயர்: முத்து**

---

**18.03.2025 :<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. பி.வாதி எனக்கு அக்கா முறை ஆவார். பி.வாதி தாக்கல் செய்த எதிருரையை நான் படித்து பார்த்தேன். அதன் சங்கதிகள் தெரியும். சொத்து எங்கள் சொத்து அதை பி.வாதிகளிடமிருந்து மீட்டு தர வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பி.வாதிகள் சொத்தை உழுது வந்தனர். முத்து, செல்லக்கண்ணு பாகப்பிரிவினை எதுவும் செய்யவில்லை. பாகபிரிவினை 50 வருடத்திற்கு முன்பு நடந்தது என்று பிராதுவில் சொல்லியிருந்தால் அது தவறு. எனது அப்பாவுடன் 5 ஆண்கள், மூன்று பெண்கள் உள்ளனர். செல்லக்கண்ணு, பச்சமுத்து, வெள்ளைச்சாமி, முத்து, பிடாரி, பச்சையம்மாள், சீனியம்மாள் ஆகியோர் இராமனின் பிள்ளை என்றால் சரிதான். எனது அப்பா 09.01.2007ல் இறந்தார். அதற்கான இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. நான் இறப்பு சான்றிதழ் வாங்கவில்லை. எனது அப்பாவிற்கு இராமன், செல்வி, சித்ரா ஆகியோர் வாரிசுகள். தாவா சொத்து எனது அப்பாவிற்கு பாத்தியமான சொத்து என்று விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் செல்வி, சித்ரா ஆகியோர்களை பி.வாதிகளாக சேர்த்துள்ளேன். செல்வி, சித்ரா ஆகியோர்கள் எனக்கு எழுதிக்கொடுத்ததால் தாவா சொத்தில் உரிமை உண்டு என்று நான் பரிகாரம் கோரவில்லை. எங்களது பாகம் எனது அண்ணனை சேரும் என்று எனது சகோதரிகள் எழுதிக்கொடுத்தார்கள். அந்த விபரத்தை பிராதுவில் சொல்லவில்லை. ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை.

2. எனது அப்பா கிரையம் வாங்கிய அசல் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. அந்த ஆவணம் எனது பெரியப்பா கைவசம் உள்ளது. யுடிஆர் காலத்தில் எனது பெரியப்பா பெயரில் பட்டா தாவா சொத்துக்கு தாக்கலாகி இருந்தது. மேற்படி பட்டாவை வைத்து தான் 1990ம் வருடம் கடன் வாங்கினார் என்றால் சரிதான். மேற்படி கடன் வாங்கும் போது சொத்து அவர் அனுபவத்தில் இருந்தது என்றால் சரிதான். சொத்தின் பலன்களை எங்களுக்கு அளித்து வந்தார். சொத்தை அனுபவம் செய்தற்கான ஆவணங்கள் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1975ம் வருடம் எனது அப்பா கிரையம் வாங்கிய போது சொத்து யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் தெரியாது. வில்லங்கசான்றிதழ் எங்கள் பெயரில் இருந்தது. பட்டா எனது அப்பா பெயரில் கிடையாது என்றாலும் எனது அப்பா பெயரில் பட்டா இருந்திருந்தால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் பட்டா பெறுவதற்கு முன்பாகவே எனது அப்பா இரண்டு ஆண்டு காலத்தில் இறந்துவிட்டார். அதனால் தான் எனது அப்பா பெயரில் பட்டா இல்லை.

3. நானும், எனது அம்மாவும் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பட்டா கோரி மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். சிறுவயது என்பதால் எங்களுக்கு தெரியவில்லை. தாவாசொத்துக்கு செல்லக்கண்ணு பெயரில் பட்டா இருந்தது எனக்கு தெரியும். தற்போது தாவா சொத்திற்கு பட்டா பி.வாதி மகள் சத்யா பெயரில் உள்ளது. செல்லக்கண்ணு 1ம் பி.வாதி பெயருக்கு ஏற்படுத்திய ஆவணம் சம்பந்தமாக நான் எந்த பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். பி.வாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் சங்கதிகளை எனது நிருபணவாக்குமூலத்தில் மறுத்துள்ளேனா என்றால் இல்லை. 12.06.1998ம் தேதியிட்ட 2ம் பி.வாதி பெயரில் ஏற்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தை நான் 2012ல் நகல் எடுத்து படித்து பார்த்தேன். இவ்வழக்கில் ஏற்பட்ட ஒரு தலைபட்ச தீர்ப்பாணையின் அடிப்படையில் பட்டா எனது பெயருக்குஏற்பட்டது என்றால்சரிதான். மேற்படி ஒரு தலைபட்ச தீர்ப்பு ரத்து செய்யப்பட்டது என்றாலும் தற்போது நடந்து வருகிறது என்றாலும் சரிதான். மேற்படி ரத்து செய்யப்பட்ட ஒரு தலைப்பட்ச தீர்ப்பாணையை நான் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் இவ்வழக்கை தீர்மாணிக்கக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி தீர்ப்பாணையின் அடிப்படையில் நான் பட்டா கேட்டு தாக்கல் செய்த மனுவில் வருவாய் கோட்டாட்சியர் பி.வாதிகளை விசாரணை செய்தார். பி.வாதி மாவட்ட வருவாய் அலுவலரிடம் வழக்கு தாக்கல் செய்தார். வருவாய் நீதிமன்றத்தில் பி.வாதிகளை விசாரணை செய்யாமல் ஒரு தலைபட்ச உத்தரவுபிறப்பிக்கப்பட்டது என்றால்சரியல்ல. தாவா சொத்து எனது தகப்பனார் மற்றும் அவரது சகோதர, சகோதரிகள் அனுபவித்த பூர்வீக கூட்டுக்குடும்ப சொத்து என்றால் இல்லை. எனது அம்மாவின் சீதன நகைகளை வைத்து தாவா சொத்து வாங்கப்பட்டது. மேற்படி சங்கதிகளை எனது பிராதுவில் சொல்லியுள்ளேன். மேற்படி சங்கதிகள் தவறு என்றாலும் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா கிரையம் பெற்ற கிரைய பத்திரம் பெயரளவுபத்திரம் என்றால் சரியல்ல.

4. எனது அப்பாவும், அவரது சகோதரர்களுக்கும் இடையே ஏற்பட்ட பாகபிரிவினையில் தாவா சொத்து செல்லக்கண்ணுக்குஒதுக்கப்பட்டது என்றால்சரியல்ல. மேற்படி பாகபிரிவனை பத்திரத்தை வைத்து 27.12.1990ல் தாவா சொத்தை செல்லக்கண்ணு அடமானம் வைத்தார் என்றால் தெரியாது. சொத்து நாளது தேதி வரை 1ம் பி.வாதிக்கு பாத்தியமக இருந்து 2ம் பி.வாதிக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்ததின் மூலம் 2ம் பி.வாதி அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. 1998க்கு பின்னர் எனது பெரியப்பா செல்லக்கண்ணு தாவா சொத்தின் பலன்களை எங்களுக்குரிய பங்கை தராமல் பிரச்சனை செய்து வந்தார். அதன் பிறகு தான் நான் வழக்கு தாக்கல் செய்தேன். மேற்படி பிரச்சனை 2012ல் தான் எனக்கு தெரியவந்தது. பிராதுவில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்குமூலம் தவறு என்றாலும் வழக்குரை சங்கதிகளின் படி இந்த வழக்கு காலவரையறை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து பி.வாதிகளின் அனுபவத்தில் உள்ள போது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரமுடியாது என்றால்சரியல்ல. சொத்தை பி.வாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள். சொத்தை மீட்டு தர பரிகாரம் கோரியுள்ளேன். நான் கோரியுள்ள பரிகாரம் செல்லாது என்றாலும் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும்சரியல்ல.
கு.வி. முடிவுற்றது.